DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 167/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 29th day of July 2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 3** | கிராமம் | : | |
| பெயர் | : | அப்பாஸ் | தாலுகா | : | |
| த/பெ. | : | திவான் மைதீன் | சமயம் | : | |
| வயது | : | | ஜாதி | : | |
| தொழில் | : | | | | |

நாள்: 29.07.2025

நேரம்: 01.45

எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**முதன்மை விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொசுவலை வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. எதிரியை நான் பார்த்ததில்லை. சம்பவத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பு நாங்கள் சத்யா ஏஜென்சியில் ஒரு டிவி வாங்கியிருந்தோம். அந்த டிவி பழுதாகிவிட்டதால் சத்தியா ஏஜென்சியில் புகார் செய்திருந்தோம். சத்யா ஏஜென்சியில் இருந்து டிவியை சரி செய்வதற்காக ஒருநபரை எங்கள் வீட்டிற்கு அனுப்பியிருந்தார்கள். அவர் டிவியை சரிசெய்துவிட்டு, அவரது செல்போன் மூலமாக எனது மனைவியின் செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு, டிவி நன்றாக ஓடுகிறதா என்று கேட்டுள்ளார். அதன்பிறகு எனது மனைவி செல்போனிற்கு வாட்ஸ்ஆப் மூலமாக ஆபாசமாக குறுஞ்செய்தி அனுப்பியிருந்தார். அதில் நல்ல செக்ஸ் செய்வேன், நான் நாக்கு போடுவேன் என்று தரக்குறைவாக எனது மனைவிக்கு குறுஞ்செய்தி அனுப்பியிருந்தார். அதன்பிறகு எனது மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

இந்த வழக்கு சம்மந்தமாக எனது மனைவி, எனக்கு 26.01.2020ம் தேதியன்று பகல் 12.00 அல்லது 1.00 மணியளவில் என்னிடம் தகவல் கூறினார். காவல் நிலையத்தில் எப்போது எனது மனைவி புகார் அளித்தார் என்றால் பிப்ரவரி மாதம் 1 ம் தேதி, காலை 10.00 அல்லது 10.30 மணியளவில் நிலையம் சென்று புகார் கொடுத்தார். எனது மனைவி காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க சென்றபோது, நானும் அவருடன் நிலையம் சென்றேன். அந்த புகாரில் நானும் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேனா என்றால், ஆமாம் செய்துள்ளேன்.

புகாரை நிலையத்தில் வைத்து எனது மனைவி தான் எழுதினார். அந்த புகாரில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார் அளித்தபோது புகாருடன் இணைத்து சத்யா ஏஜென்சியில் டிவி வாங்கியதற்குண்டான ரசீது, அது பழுதடைந்து, சரிசெய்யப்பட்டதற்குண்டான ஆவணம் ஏதேனும் கொடுத்தோமா என்றால் சரியாக நினைவில் இல்லை. சர்வீஸ் செய்வதற்காக எந்த எண்ணிற்கு போன் செய்து தகவல் அளித்தோம் என்பதை புகாரில் குறிப்பிட்டுள்ளோமா என்றால் நிறுவனத்தின் பெயரை மட்டும் தான் கூறியிருந்தோம், செல்போன் நம்பரை கூறவில்லை.

சத்யா ஏஜென்சியில் மேலாளர் மற்றும் சர்வீஸ் மேலாளரை புகாரில் குறிப்பிடவில்லை. சம்பவம் நடந்து 8 நாட்கள் கழித்து தான் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரானது காலதாமதமாக கொடுத்ததற்கான காரணம் குறித்து, புகாரிலோ, போலிசார் விசாரணையிலோ சொன்னேனா என்றால் ஆமாம், நான் சென்னையில் இருந்து நிறுவனத்திடம் பேசி, அவர்கள் எதிரியை கண்டிப்பார்கள் என்று நினைத்து இருந்துவிட்டோம். ஆனால் எதிரியை நிறுவனத்தார் கண்டிக்கவில்லை என்பதால், புகார் அளித்தோம்.

நிறுவனத்திற்கு போன் செய்து, கூறியதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் எந்த எண்ணிற்கு யாரை தொடர்பு கொண்டேன் என்றால் ஒரு டீலரிடம் பேசினேன், ஆனால் அவர் பெயர் மற்றும் செல்போன் எண் எனக்கு தெரியாது. நாங்கள் காவல் நிலையத்திற்கு புகார் அளிக்க சென்றபோது, எங்களுடன் யார் வந்தார்கள் என்றால் சரியாக நினைவில் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்ன தேதியில், எங்கு வைத்து, எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்று குறிப்பிட்டு கூற இயலாது என்றால் சரிதான். என்னை விசாரித்ததாக சொல்லப்படும் அதிகாரி எந்த படிநிலையை சேர்ந்தவர் என்று கூற இயலுமா என்றால் ஆய்வாளர் என்னை விசாரித்தார், ஆனால் அவர் பெயர் எனக்கு தெரியவில்லை.

டிவி பழுது பார்ப்பதற்காக ஒரு நபர் மட்டுமே வந்ததாக எனது மனைவி என்னிடம் கூறினார். டிவி பழுதுபார்ப்பதற்காக 3 நபர்கள் வந்தார்கள் என்றாலும், நான் ஒரு நபர் வந்ததாக பொய்யாக கூறிகிறேன் என்றால் சரியல்ல, என்று சாட்சி கூறிவிட்டு சரிவர நினைவில்லை என்று கூறினார். நான் நீதிமன்ற சாட்சியத்தில் கூறிய சங்கதிகளை தான், போலிசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். சத்யா ஏஜென்சியில் எப்போது, எந்த தேதியில் டிவி வாங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நாங்கள் வாங்கிய டிவி எந்த தேதியில் பழுதானது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த தேதியில் சத்யா ஏஜென்சிற்கு எனது மனைவி போன் செய்தார் என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

எந்த தேதியில் சத்யா ஏஜென்சியில் இருந்து டிவி பழுதை சரிசெய்து கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், எனது மனைவிக்கு தான் தெரியும். மேற்படி தேதிகளை நான் எனது மனைவியிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான், மனஉளைச்சலாக இருந்தது, அதனால் கேட்கவில்லை. எனது மனைவியின் செல்போனிற்கு குறுஞ்செய்தி வந்த நிலையில், அதை எதிரிதான் அனுப்பினார் என்று கூறஇயலாது என்றாலும், நிறுவனத்தின் எண்ணில் இருந்து வந்துள்ளது என்றாலும், சரியல்ல. எதிரி அனுப்பியதாக தான் எனது மனைவி, என்னிடம் கூறினார்.

பொதுவாக குறுஞ்செய்தியானது ஒரு செல்போனில் இருந்து மற்றொரு செல்போனிற்கு பரிமாற்றும் ஆகும் சமயத்தில் யாரால் அந்த குறுஞ்செய்தி அனுப்பப்பட்டது என்று பார்க்க இயலாது என்றால் செல்போன் யாருக்கு சொந்தமாக இருக்கிறதோ அவர் தான் அனுப்ப முடியும். செல்போன் ஒருவருக்கு சொந்தமாக இருந்து வேறு ஒருவர் அந்த நபருக்கே தெரியாமல் செல்போனை எடுத்து, குறுஞ்செய்தி அனுப்ப வாய்ப்புள்ளது என்றால் பாஸ்வேர்டு இருக்கும், அதனால் பயன்படுத்த முடியாது. நான் கூறுவதுபோல எதிரி எனது மனைவிக்கு குறுஞ்செய்தி அனுப்பவில்லை என்றாலும், எதிரியின் செல்போனை வேறு ஒருவர் எடுத்து எதிரிக்கே தெரியாமல் குறுஞ்செய்தி அனுப்பியுள்ளார் என்றாலும் சரியல்ல, அந்த செல்போனை எதிரி லாக் செய்திருப்பார், அதனால் வேறு யாரும் பயன்படுத்த முடியாது.

எதிரி லாக் செய்திருப்பார் என்பது நான் அனுமானத்தின்பேரில் கூறுகிறேன் என்றால் ஒன்று எதிரி குறுஞ்செய்தி அனுப்பியிருக்க வேண்டும் இல்லையென்றால் அவர் வேறு யாரையேனும் தூண்டி அனுப்ப செய்திருக்க வேண்டும், அதற்கு அவர் தான் பொறுப்பு. போலிசார் என்னையும், எனது மனைவியையும் விசாரித்தபோது எதிரியின் செல்போனை கைப்பற்றி என்னிடமும், எனது மனைவியிடமும் காண்பித்து அது சம்மந்மாக கேட்கவில்லை என்றால் சரிதான். எனது மனைவியின் செல்போனை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும்

சம்மந்தமில்லை என்றாலும், எதிரியின் கைபேசியை யாரோ எடுத்து, தவறுதலாக பயன்படுத்தியுள்ளார்கள் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2025.07.29 16:31:51 +0530